# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 84 — 1973 නොවැම්බර් 02 වැනි සිකුරාදා — 1973.11.02

84 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 02 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV—உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 427 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. | 431 | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | 436 |
| பரீட்சைகளும், ப ட்சைப் பெறுபேறுகளும். பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | 435 | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத்தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தள்கள் | — | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | 437 |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு பதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வில்லியம் நீல் த அல்விஸ் ஆகிய நான் இவ்வறிவித்தல் வாயிலாக—

(1) களுத்துறை மாவட்டத்தில் இத்தகொடப் பற்றுவிலுள்ள ஹொறவல, தொடங்கொட ஆகிய கிராமப் பிரதேசங்களில் தற்போத மைந்துள்ள வட்டாரங்களைப் புதிய வட்டாரங்களாக உட்பிரிவினை செய்வது சம்பந்தமாக 1964 யூலை 10 ன் 14,102 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலை, அதனகத்துள்ள முதலாம் அட்டவணையில் " ஹொறவலக் கிராமப் பிரதேசம் " என்னும் தலையங்கத்தின் கீழ் காணப்படும் சகல விடயங்களுக்கும் பதிலாக அதிலுள்ள பல்வேறு விவரங்களையும் முதலாவதாகக் கூறப்பட்ட அட்டவணையில் உரிய நிரையில் காட்டி இதனோடுள்ள விடயங்களைச் சேர்ப்பதன் மூலம் திருத்துகிறேன், அத்துடன்

(2) இவ்வறிவித்தலின் ஏற்பாடுகள்—

(அ) முற்கூறப்பட்ட ஹொறவலக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 1974 ஆம் வருடத்தில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய எவ்விடயத்தோடும் அவ்வேற்பாடுகள் சம்பந்தப்பட்டவரை இவ்வறிவித்தல் கசெற்றில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டுமெனவும் ;

(ஆ) வேறெவ்விடயத்தோடும் சம்பந்தப்பட்டவரை, முற்கூறப்பட்ட கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையில் இதன் கண்ணுள்ள திகதியன்று பதவியிலிருக்கும் உறுப்பினர்களின் பதவிக் காலம் முடிவடையும் திகதியை உடனடுத்து வரும் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டுமெனவும் வெளிப்படுத்துகிறேன்.

நீல். த அல்விஸ்,
பதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆ ஒக்ரோபர் மீ 01 ந உ.

அட்டவணை

ஹொறவலக் கிராமப் பிரதேசம்

| நிரை 1<br>தற்போதுள்ள வட்டாரங்கள் | நிரை 2<br>புதிய வட்டாரங்கள் |
|---|---|
| இல. 794—ஹொறவல | 1 ஆம் வட்டாரம்—ஹொறவல கிழக்கு—ஹொறவலகிராமத்துக்குள் அமைந்துள்ளதும் ஹொறவல பெலவத்தைப் பிரதான வீதிக்குக் கிழக்கேயுள்ளதுமான எல்லமுல்ல, மனமுல்ல, கமத்தகொட, மில்லகஹவத்த, பெற்றவத்த, பொடேவத்த, பின்வல ஒவிற்ற (பாகம்) ; கலுதேலிய ஆகிய குக்கிராமங்களையும் டெனிஸ்டன் தோட்ட (பாகம்) த்தையும் கொண்டது. |

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அளுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1970 ம் ஆ யூன் மீ 2 ந உ.

| நிரை 1<br>தற்போதுள்ள வட்டாரங்கள் | நிரை 2<br>புதிய வட்டாரங்கள் |
|---|---|
| | 2 ஆம் வட்டாரம்—ஹொறவலமத்தி—ஹொறவல கிராமத்துக்குள் அமைந்துள்ளதும் மல்லகந்தவத்தை (பாகம்), பின்வல ஓவிற்ற (பாகம்) மஞகொட, புவக்கஹலியத்த, பெலகெற்றியாகொட, கல்படவத்த, தல்லகஹவத்த, ஹபுறுவ கொட, கெறெத்தரவல, வெடகொடவத்து முல்லே, பெல்லாமடல, குருந்துவத்தை, மஞன ஆகிய குக்கிராமங்களேயும், ஹொறவலக் கிராமத்துக்குள் அமைந்துள்ளதும் ஹொறவல–பெலாவத்தை பிரதான வீதிக்கு மேற்கேயுள்ளதுமான டெனிஸ்டர் தோட்ட (பாகம்) த்தையும் கொண்டது. |
| | 3 ஆம் வட்டாரம்—ஹொறவல மேற்கு—ஹொறவல கிராமத்துக்குள் அமைந்துள்ள கட்டுவலகொட, மாவத்தகொட, வடேவத்த, தியஉல பொத்த, திக்கேன, மகாவத்தை ஹொறவலவத்தை, தியகித்துலா கொட ஆகிய குக்கிராமங்களேக் கொண்டது. |
| இல. 798—ஓவிற்றிக்ல் .. | 4 ஆம் வட்டாரம்—ஓவிற்றிகல—மத்துகம–அலுத்கம பிரதான வீதிக்குக் கிழக்கே அமைந்துள்ளதும் மத்துகமப் பட்டின சபையின் எல்லேகளுக்கு வெளியேயுள்ளதுமான ஓவிற்றிகலக் கிராமத்தின் அந்தப் பகுதியைக் கொண்டது. |
| | 5 ஆம் வட்டாரம்—படுகம்—படுகமக் கிராமத்துக்குள் அமைந்துள்ள ரச்சிலிகொட, தம்பேதொடவத்த, கொக்ககந்த, கொக்கவலதேனிய, பட்டறயாவத்த, தியகித்துலகந்த, கிளாறன்ஸ் ஹில்வத்த (புதிய வீடமைப்புத் திட்டம்), விதனவத்த, கீனியாகொட, பொல்ஹென ஆகிய குக்கிராமங்களேயும் எக்கமகொடவத்தைக் குடியேற்றம், படுகமவவத்தை ஆகியவற்றையும் கொண்டது. |
| | 6 ஆம் வட்டாரம்—சிரிகந்துற—படுகமக் கிராமத்திலுள்ள கல்லெல்லஹேன, லியங்கந்த ஆகிய குக்கிராமங்களேயும் ஓவிற்றிகலக் கிராமத்திலுள்ள சிரிகந்துறவத்தை, எல்ல, பொதியாகந்த, கொக்கேன, புஸ்வெல்தென்ன, கோஇலந்தெனிகந்த ஆகிய குக்கிராமங்களேயும், மத்துகமப் பட்டின சபை எல்லேகளுக்கு வெளியேயுள்ளதும் சிரிகந்துற வீதிக்கு இரு பக்கங்களிலும் அமைந்துள்ளதுமான படுகமக் கிராமத்தின் அந்தப் பகுதியையும் கொண்டது. |
| இல. 796/797—நவுந்துடுவ/கீரந்திடிய | 7 ஆம் வட்டாரம்—நவுந்துடுவ தெற்கு—கீரந்திடியக் கிராமத்திலுள்ள நவுந்துடுவ தெற்கு, ஹிரிவெட்டல ஆகிய கிராமங்களேக் கொண்டது. |
| | 8 ஆம் வட்டாரம்—நவுந்துடுவ வடக்கு—கீரந்திடியக் கிராமத்திலுள்ள நவுந்துடுவ வடக்கு, அலுத்கொட என்றழைக்கப்படும் பகுதி ஆகிய கிராமங்களேயும் (கிளே பிரிவு நீங்கலான) யட்ட தொலத் தோட்டத்தையும் கொண்டது. |
| | 9 ஆம் வட்டாரம்—புசெலமுல்ல—கீரந்திடியக் கிராமத்திலுள்ள புசெல முல்லேயின் பாகத்தைக் கொண்டது. |
| | 10 ஆம் வட்டாரம்—கீரந்திடிய—(ஹிரிவெட்டல, அலுத்கமகொட, புசெலமுல்ல என்றழைக்கப்படும் பிரதேசங்கள் நீங்கலாக) கீரந்திடியக் கிராமத்தைக் கொண்டது. |
| இல. 798—கொட்டகெதற .. | 11 ஆம் வட்டாரம்—கொட்டகெதற—கொட்டகெதறக் கிராமத்தைக் கொண்டது. |
| | 12 ஆம் வட்டாரம்—கொட்டஹெகட—கொட்டஹேகட–கொட்டஹேகட, பல்லேகொட ஆகிய கிராமங்களேக் கொண்டது. |
| இல. 802—போபிற்றிய .. | 13 ஆம் வட்டாரம்—போபிற்றிய கிழக்கு—தங்கஹஸ்வெட்டும, மாப்பகங்கும்புற ஆகிய நெல் வயல்களுக்கு வடக்கேயும் பந்திய–போபிற்றிய வீதிக்கு (மத்துகமப் பட்டின சபை எல்லேகளுக்கு வெளியே) க் கிழக்கேயும் அமைந்துள்ள போபிற்றியக் கிராமத்தின் அந்தப் பகுதியைக் கொண்டது. |
| | 14 ஆம் வட்டாரம்–போபிற்றிய மேற்கு தங்கஹஸ்வெட்டும, மாப்பகங்கும்புற ஆகிய நெல் வயல்களுக்குத் தெற்கேயும் பந்திய–போபிற்றிய வீதிக்கு (மத்துகமப் பட்டின சபை எல்லேகளுக்கு வெளியே) மேற்கேயும் அமைந்துள்ள போபிற்றியக் கிராமத்தின் அந்தப் பகுதியைக் கொண்டது. |
| இல. 802எ—யட்ட தொலவத்தை | 15 ஆம் வட்டாரம்—யட்ட தொலவத்தை கிழக்கு மகாகொஸ்கஹமுல்லே, தம்புத்திய கெற்றகொட ஆகிய கிராமங்களேக் கொண்டது. |
| | 16 ஆம் வட்டாரம்—யட்ட தொலவத்தை வடக்கு—யட்ட தொலவத்தைக் கிராமத்தைக் கொண்டது. |
| | 17 ஆம் வட்டாரம்—யட்ட தொலவத்தை மேற்கு யட்டதொல, போகனவத்தை, தியகல, கரம்பேஹோர ஆகிய கிராமங்களேக் கொண்டது. |
| இல. 803—நாரவில .. | 18 ஆம் வட்டாரம்—நாரவில—நாரவிலக் கிராமத்தைக் கொண்டது |
| | 19 ஆம் வட்டாரம்—ஹெனேகம—ஹெனேகம், பறவல ஆகிய கிராமங்களேக் கொண்டது. |
| இல. 804—பந்திய .. | 20 ஆம் வட்டாரம்—பந்திய கிழக்கு—மத்துகமப் பட்டின சபைப் பிரதேசத்தின் எல்லேகளுக்கு வெளியேயமைந்துள்ள பந்தியக் கிராமத்திலுள்ள வெல்கந்தலக் கிராமத்தையும் பொக்கேகம, கலகும்புற என்றழைக்கப்படும் பிரதேசங்களேயும், கொண்டது |
| | 21 ஆம் வட்டாரம்—பந்திய மேற்கு—(போக்கேகம, கலகும்புற என்றழைக்கப்படும் பிரதேசங்கள் நீங்கலாக) மத்துகமப் பட்டின சபைப் பிரதேச எல்லேகளுக்கு வெளியேயமைந்துள்ள பந்தியக் கிராமத்தைக் கொண்டது. |

11-25—02.11.73 ந் திகதிய வர்த்தமானி இல: 84

இராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) இராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு பதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வில்லியம் நீல் த அல்விஸ் ஆகிய நான் இவ்வறிவித்தல் வாயிலாக—

(1) கேகாலை மாவட்டத்திலுள்ள கல்பொட கோறளைப் பெரும்பாக அரசிறை அலுவலர் பிரிவிலுள்ள அரநாயக்க இராமப் பிரதேசத்தில் தற்போதமைந்துள்ள அத்தகைய வட்டாரங்களை உட்பிரிவினை செய்வது சம்பந்தமாக 1964 செத்தெம்பர் 30 ன் 14,185 ம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலினால் திருத்தப்பட்டவாறான 1964 யூலை 24 ன் 14,117 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலை அதனோடுள்ள மூன்றும் அட்டவணைக்குப் பதிலாக இதனோடுள்ள அட்டவணையை இடுவதன் மூலம் திருத்துகிறேன்.

(2) இவ்வறிவித்தலின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகள்—

(அ) முற்கூறப்பட்ட அரநாயக்கக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 1974 ஆம் ஆண்டில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய எவ்விடயத்தோடும் அவ்வேற்பாடுகள் சம்பந்தப்பட்டவரை இவ்வறிவித்தல் கசெற்றில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டுமெனவும்,

(ஆ) வேறெவ்விடயத்தோடும் அவை சம்பந்தப்பட்டவரை 1974 ஆம் ஆண்டின் யூலை மாதத்து முதலாம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டுமெனவும்,

வெளிப்படுத்துகிறேன்.

நீல் த அல்விஸ்,
பதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஒற்றோபர் மீ 2 ந உ.

அட்டவணை

அரநாயக்க இராமப் பிரதேசம்

| நிரை 1 தற்போதுள்ள வட்டாரங்கள் | நிரை 2 புதிய வட்டாரங்கள் |
|---|---|
| 41—அரும .. | 1 ஆம் வட்டாரம்—அரும—அரும, தெய்யன்வல, ருஹல மேற்கு ஆகிய கிராமங்களையும் பேரவிலத் தோட்டம், நட்டகந்த தோட்டம் ஆகியவற்றையும் கொண்டது. |
| | 2 ஆம் வட்டாரம்—செலவ—செலவக் கிராமத்தைக் கொண்டது. |
| | 3 ஆம் வட்டாரம்—ருஹல கிழக்கு—ருஹல கிழக்கு, ரண்டிலிகம, கலல்பிற்றிய ஆகிய கிராமங்களைக் கொண்டது. |
| 42—ஹக்குறுகம்மன .. | 4 ஆம் வட்டாரம்—ஹக்குறுகம்மன, (பல்லேகமவும் உடகமவும்), போவல்கஹ, அல்கல்ல ஆகிய கிராமங்களைக் கொண்டது. |
| | 5 ஆம் வட்டாரம்—தெலெகே—தெலெகைக் கிராமத்தைக் கொண்டது. |
| | 6 ஆம் வட்டாரம்—டுல்தெனிய—டுல்தெனியக் கிராமத்தையும் ஹக்குறு கம்மனக் கிராம சேவகர் பிரிவுக்குள் வரும் அம்பதெனியத் தோட்டத்தின் அந்தப் பகுதியையும் கொண்டது. |
| | 7 ஆம் வட்டாரம்—பன்னல—பன்னல, தெமலஹிரிய, ஊேப்பனை ஆகிய கிராமங்களைக் கொண்டது. |
| 43—அரநாயக்க .. | 8 ஆம் வட்டாரம்—அரநாயக்க—அரநாயக்க (மக ஓயாவின் கிழக்குப் பகுதி), உக்கொட ஆகிய கிராமங்களையும் எலிக்லண்ட் தோட்டத்தையும் கொண்டது. |
| | 9 ஆம் வட்டாரம்—வெலிமன்ன—வெலிமன்ன, கிராமத்தையும், கெற்ற ஹிகந்த, றஹீனவத்த ஆகியவற்றையும் கொண்டது. |
| 43அ—அம்பலகந்த .. | 10 ஆம் வட்டாரம்—அம்பலகந்த—அம்பலகந்தக் கிராமத்தையும் நாரங்கலத் தோட்டம், மவுண்ட் காமல் தோட்டத்தின் மேற்பிரிவு, கீழ்ப் பிரிவு ஆகியவற்றையும் கொண்டது. |
| | 11 ஆம் வட்டாரம்—பொடபே—போடபே கிராமத்தைக் கொண்டது. |
| 44—கலகஸ்பிற்றிய .. | 12 ஆம் வட்டாரம்—கலகஸ்பிற்றிய 1—தலகஸ்பிற்றிய (சிங்களகம) யொடாகம, தீவெல்கம, மெடிலிய, போபிற்றிய ஆகிய கிராமங்களைக் கொண்டது. |
| | 13 ஆம் வட்டாரம்—தலகஸ்பிற்றிய 11—தலகஸ்பிற்றிய (முஸ்லிம் கிராமம்) க் கிராமத்தையும் பனுமுறேத் தோட்டத்தையும், கொண்டது. |
| | 14 ஆம் வட்டாரம்—ஹபலக்காவ—ஹபலக்காவ கொட்டல்பெத்த, டுல்தெனிய, பக்குல்வல, தெம்பரும, அம்பகுமுறை ஆகிய கிராமங்களைக் கொண்டது. |
| 45—திப்பிற்றிய .. | 15 ஆம் வட்டாரம்—வில்பொல—வில்பொல, திபுல்கமுவ, இட்டவல, மாவத்தகொட ஆகிய கிராமங்களையும் திப்பிற்றிய கிராம சேவகர் பிரிவுக்குள் வரும் அரநாயக்க குடியேற்றத்தின் அந்தப் பகுதியையும் கொண்டது. |
| | 16 ஆம் வட்டாரம்—திப்பிற்றிய—திப்பிற்யாகம, புடவத்த, கெரெபத்கம, மேனம, தவலங்கொட ஆகிய கிராமங்களையும் திப்பிற்றியப் பட்டினத்தையும் கொண்டது. |
| 45அ—கெவிற்றிபிற்றிய .. | 17 ஆம் வட்டாரம்—கெவிற்றிபிற்றிய—கெவிற்றிபிற்றிய-கெவிற்றிபிற்றியாகமக் கிராமத்தையும், கெவிற்றிபிற்றியா பட்டினத்தையும் கெவிற்றிபிற்றியக் கிராம சேவகர் பிரிவுக்குள் வரும் அம்பதெனியத் தோட்டத்தின் அந்தப் பகுதியையும் கொண்டது. |
| | 18 ஆம் வட்டாரம்—கெஹினிபெத்தற—பெஹினிபெத்தறக் கிராமத்தைக் கொண்டது. |
| 46—நிக்கபிற்றிய .. | 19 ஆம் வட்டாரம்—நிக்கபிற்றிய—நிக்கபிற்றிய, பொலம்பேகொட ஆகிய கிராமங்களையும் பொல்தேனிய குடியேற்றத்தையும் கொண்டது. |
| | 20 ஆம் வட்டாரம்—கொடிகமுவ—கொடிகமு கிராமத்தைக் கொண்டது. |
| | 21 ஆம் வட்டாரம்—நாரங்கம்மன—நாரங்கம்மன, கல்வான, புலுகம்மன ஆகிய கிராமங்களைக் கொண்டது. |
| 47—ஹத்கம்பொல .. | 22 ஆம் வட்டாரம்—எலபிற்றிய—எலபிற்றியக் கிராமத்தையும் ஹத்கம்பொலக் கிராம சேவகர் பிரிவுக்குள் வரும் அரநாயக்க குடியேற்றத்தின் அந்தப் பகுதியையும் யெலங்கௌரித் தோட்டத்தையும் கொண்டது. |
| | 23 ஆம் வட்டாரம்—மொறகம்மன—மொறகம்மன, கெற்றஹெரிய ஆகிய கிராமங்களைக் கொண்டது. |
| | 24 ஆம் வட்டாரம்—ஹத்கம்பொல—ஹத்கம்பொலக் கிராமத்தைக் கொண்டது. |
| | 25 ஆம் வட்டாரம்—பரபிற்றிய—பரபிற்றிய, பெலிகொட, ஒயிலன் எலிய ஆகிய கிராமங்களைக் கொண்டது |
| 47அ—தெபத்கம .. | 26 ஆம் வட்டாரம்—தெபத்கம உடபாகே—தெபத்கம உடபாகேக் கிராமத்தைக் கொண்டது |
| | 27 ஆம் வட்டாரம்—தெபத்கம பல்லேபாகே—தெபத்கம பல்லேபாகே கிராமத்தைக் கொண்டது |
| | 28 ஆம் வட்டாரம்—கனுகல—கனுகல குடியேற்றம், தெபத்கமக் குடியேற்றம், தெபத்கமத் தோட்டம், ஹகந்தத் தோட்டம் ஆகியவற்றைக் கொண்டது. |

11–61—02.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 84

## மொறட்டுவை நகர சபை

களியாட்டவரிக் கட்டளைச்சட்டம்

(267 ஆம் அதிகாரமாம்) களியாட்டவரிக் கட்டளைச்சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ் மொறட்டுவை நகர சபையினால் நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானம் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றமையினால் அப்பிரிவின் (2) ம் உட்பிரிவின் பிரகாரம் பிரசுரிக்கப்படுகின்றது.

### தீர்மானம்

சபையின் நிருவாக எல்லைகளுக்குள் நடத்தப்படும் (கட்டளைச் சட்டத்தின் வரையறுக்கப்பட்டுள்ளவாறான) களியாட்டங்களுக்கான அனுமதிக்கட்டணங்கள் மீது (267 ம் அதிகாரமாம்) களியாட்டவரிக் கட்டளைச்சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ் 1952 யூன் 27 ன் 10,418 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட தீர்மானத்தினால் விதித்து அறவிடப்பட்ட வரிக்குப்பதிலாக, இதன் கீழ் காட்டப்பட்டுள்ள விகிதங்களின்படியான ஒரு வரியை இத்தீர்மானம் கசெற்றில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து இச்சபை இத்தால் விதித்து அறவிடுகின்றது.

கட்டணத்தொகை

| | வரிவிகிதம் ரூ. ச. |
|---|---|
| வரித்தொகை நீங்கலாக அனுமதிக்கட்டணம் : | |
| (அ) 20 சதத்துக்குக் குறையாமலும் ஆனால் 50 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 05 |
| (ஆ) 50 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 99 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 10 |
| (இ) 1.00 ரூபாவுக்கு .. .. .. | 0 20 |
| (ஈ) 1.00 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 1 ரூபா 50 சதத்திற்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 25 |
| (உ) 1.00 ரூபா 50 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 2 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 35 |
| (ஊ) 2.00 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 3.00 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 50 |
| (எ) 3.00 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 4.00 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 75 |
| (ஏ) 4.00 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 5.00 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 1 0 |
| (ஐ) 5.00 ரூபாவுக்கு மேற்படுமிடத்து— | |
| (1) முதல் 5 ரூபாவுக்கு .. .. | 1 0 |
| (2) மேலதிக ஒவ்வொரு 1 ரூபாவுக்கு அல்லது அதன் பகுதிக்கு .. .. | 0 25 |

டீ. இராசேந்திரா,
மேலதிக செயலாளர்,
அரசாங்க நிர்வாகம்,
உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 1973 ம் ஆண்டு ஒற்றோபர் மீ 05 ந் உ.

11–5—02.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 84

---

## வெள்ளவாயாக் கிராமச்சபை

களியாட்டவரிக் கட்டளைச்சட்டம்

(267 ம் அத்தியாயமான) களியாட்டவரிக் கட்டளைச்சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ் வெள்ளவாயாக் கிராமச்சபையினால் நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானம், அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு அப்பிரிவின் (2) ம் உட்பிரிவின் நியதிகளின்படி வெளியிடப்படுகின்றது.

### தீர்மானம்

" வெள்ளவாயாக் கிராமச்சபையின் நிர்வாக எல்லைக்குள் நடத்தப்படும் (அக்கட்டளைச்சட்டத்தின் வரையறுக்கப்பட்டுள்ளவாறான) களியாட்டங்களுக்கான அனுமதிக்கட்டணங்கள் மீது (267 ம் அத்தியாயமான) களியாட்டவரிக் கட்டளைச்சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ் இச்சபை 1956 செத்தெம் 28 ந் தேதிய 10,976 ம் இலக்க கசெற்றில் வெளியிடப்பட்ட தீர்மானத்தினால் அத்தகைய கட்டணங்கள் தொடர்பில் விதித்து அறவிடப்பட்ட வரிக்குப் பதிலாக நூற்றுக்கு இருபது வீதமான ஒரு வரியை இத்தீர்மானம் கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து இத்தால் விதித்து அறவிடுகின்றது ".

டீ. இராசேந்திரா,
மேலதிக செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 1973 ம் ஆண்டு ஒற்றோபர் ஆ 16 ந் உ.

11–19—02.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 84

---

## பல்லேகம்பஹ கோறளே கிராமச்சபை

(267 ஆம் அதிகாரமாம்) களியாட்டவரிக் கட்டளைச்சட்டத்தின் 2ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ் நுவரேலிய மாவட்டத்திலுள்ள பல்லேகம்பஹ கிராமச் சபையினால் நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானம் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றமையினால், அப்பிரிவின் (2) ம் உட்பிரிவின் பிரகாரம் பிரசுரிக்கப்படுகின்றது.

### தீர்மானம்

சபையில் நிருவாக எல்லைகளுக்குள் நடத்தப்படும் (கட்டளைச்சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறான) களியாட்டங்களுக்கான அனுமதிக்கட்டணங்கள்மீது (267 ம் அதிகாரமாம்) களியாட்டவரிக் கட்டளைச்சட்டத்தின் 2ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ் இத்தீர்மானம் கசெற்றிற் பிரசுரிக்கப்படும் தேதியிலிருந்து இதன் கீழ் காட்டப்பட்டுள்ள விகிதங்களின்படியான ஒரு வரியை இச்சபை இத்தால் விதித்து அறவிடுகின்றது.

கட்டணத்தொகை

| | வரி விகிதம் ரூ. ச. |
|---|---|
| வரித்தொகை நீங்கலாக அனுமதிக்கட்டணம்: | |
| (அ) 20 சதத்துக்குக் குறையாமலும் ஆனால் 50 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 0 |
| (ஆ) 50 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 1.00 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 10 |
| (இ) 1.00 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 1.50 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 15 |
| (ஈ) 1.50 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 2.00 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 20 |
| (உ) 2.00 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 3.00 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 30 |
| (ஊ) 3.00 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 4.00 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 40 |
| (எ) 4.00 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 5.00 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 50 |
| (ஏ) 5.00 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 10.00 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 1 0 |
| (ஐ) 10.00 ரூபாவுக்கு மேற்படுமிடத்து— | |
| (1) முதல் 10.00 ரூபா வுக்கு .. | 1 0 |
| (2) மேலதிக ஒவ்வொரு 5 ரூபாவுக்கு அல்லது அதன் பகுதிக்கு .. .. .. | 1 0 |

டீ. இராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 1973.10.17

11–20—02.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 84

**கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்**

17 ம் பிரிவின்படியான அறிவித்தல்

1961 இன் 60 ம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான கிராமச் சபையின் கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம் 257) 17 (5) ம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு கனகநாயகம் நல்லைநாதன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் ஆகிய நான் இந்த அட்டவணையில் பத்தி 1 ல் குறிக்கப் பட்டுள்ள கிராமச்சபையின் கூட்டத்தை இந்த அட்டவணையில் பத்தி 2 ல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள திகதியில் அந்த அட்டவணையிற் பத்தி 3 ல் உள்ள பதிவில் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில் அந்த அட்டவணையில் பத்தி 4 ல் குறிப்பிட்ட இடத்தில் கூட்டுகிறேன்.

க. நல்லைநாதன்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

உள்ளூராட்சிப் பணிமனை,
யாழ்ப்பாணம்,
1973 ம் ஆண்டு ஒக்டோபர் 13 ம் திகதி.

**அட்டவணை**

| பத்தி 1 | பத்தி 2 | பத்தி 3 | பத்தி 4 |
|---|---|---|---|
| கிராமச் சபையின் பெயர் | திகதி | நேரம் | இடம் |
| காரைநகர் வடக்கு | 9.11.1973 | மு.ப.9.00 மணி | கிராமச் சபை பணிமனை, காரை நகர் வடக்கு |

11–119—02.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 84

# பதவிகள் வெற்றிடம்

**"இலங்கை குடியரசு வர்த்தமானப் பத்திரிகை" யின் IV ஆம் பகுதியின் விளம்பரப்படுத்தப்படும் உள்ளூராட்சிச் சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்**

*படிகள்.*—அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் விகிதங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கத் திருமணப்படி கொடுக்கற்பாலது.

2. *சேவைகள் நிபந்தனைகள்.*—1969 ம் ஆண்டின் 18 ஆம் இலக்க உள்ளூராட்சிச்சேவை அதிகாரச் சட்டத்திற்கும், உள்ளூராட்சிச் சேவைப் பிரமாணங்களுக்கும், அதிகார சபை காலத்திற்குக் காலம் விதிக்கும் மற்றும் ஏதும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகவே நியமனங்கள் அமையும்.

3. *நியமன விதிகள்.*—(அ) உ. ஆ. சேவையில் மாதாந்தச் சம்பளம் பெறும் பதவிகளுக்கு நியமிக்கப்படும் சகல உத்தியோகத்தர்களும் உ. ஆ. சே. சகாயநிதிக்கு கட்டுப்பணம் செலுத்த வேண்டும். ஊழியர் தமது திரட்டிய வேதனத்தில் 6 சதவிகிதத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுவார். ஊழியர் நியமிக்கப்படும் உள்ளூராட்சி மன்றம், அவர்பொருட்டு இந்நிதிக்கு அவரது திரட்டிய வேதனத்தின் 9 சத விகிதத்தைச் செலுத்தும்.

(ஆ) அரசாங்கத்தின் கீழ் சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்கள் அரசாங்க இளைப்பாற்றுச் சம்பளம் பற்றிய விதிகளின் 21 வது பிரிவின்படி விடுவிக்கப்பட்டு, உள்ளூராட்சிச் சேவையில் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவிகளுக்கு இடமாற்றப்பட்டால், அவர்களின் இளைப்பாற்றுச் சம்பள உரிமைகள் பாதுகாக்கப்படும். உள்ளூராட்சிச் சேவையில் ஒரு இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவியை வகிக்கும் எந்தவொரு ஊழியரும் அச் சேவையில் வேறொரு இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவிக்கு அவர் பதவியுயர்த்தப்பட்டால் அல்லது நியமிக்கப்பட்டால், அவர் நியமிக்கப்பட்ட அல்லது பதவியுயர்த்தப்பட்ட புதிய பதவியிலும் அவர் தொடர்ந்து இளைப்பாற்றுச்சம்பள உரிமைகளைப் பெறுவார்.

(இ) உள்ளூராட்சித் தாபனங்களில் அவற்றின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்கள் அல்லது விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவிகளை வகிப்பவர்கள் விடயத்தில், அவர்கள் கடைசியாக இளைப்பாறும்போது கொடுக்கப்படும் இளைப்பாற்றுச் சம்பளம். 1969 ம் ஆண்டின் 18 ம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உள்ளூராட்சிச் சேவைக்கு அவர்கள் மாற்றப்பட்ட திகதிக்கு நேர்முந்தியுள்ள திகதியன்று எந்த உள்ளூராட்சித் தாபனத்தில் வேலை பார்த்தவர்களோ அந்த உள்ளூராட்சித் தாபனத்தின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்களுக்கு அல்லது விதிகளுக்கு அமைவாக இருக்கும்.

(ஈ) உள்ளூராட்சிச் சேவையில் மாதாந்த வேதனம் பெறும் பதவிகளுக்கு நியமிக்கப்படும் ஊழியர்களுக்கு விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பளத்திட்டம் பொருந்தமாட்டாது. எவ்வாறாயினும் பெண்களும் 55 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களும், உள்ளூராட்சிச் சேவைக்கு நியமிக்கப்படுவதற்கு நேர்முந்திய தேதியில், அரசாங்க சேவையில் இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவிகளை வகித்தவர்களும் தவிர, உ. ஆ. சேவையில் இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவி ஒன்றிலிருந்து அச் சேவையில் வேறொரு இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவிக்கு நியமிக்கப்படுவார்கள் அல்லது பதவியுயர்த்தப்படுவர்கள் 1952 ம் ஆண்டு ஜூலை 30 ந் திகதி வெளியான 10,329 இலக்க அரசாங்க விசேட வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட 1952 ம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிப்பிரமாணங்களின்படி, ஸ்தாபிக்கப்பட்ட உ. ஆ. சே. விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச்சம்பள நிதிக்கு தங்களது கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 4 சத விகிதத்தைச் செலுத்த வேண்டும். குறித்த உள்ளூராட்சிமன்றம், கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 3 சத விகிதத்தைச் செலுத்தும்.

(உ) நியமிக்கப்படுபவர்கள் குறித்த உள்ளூராட்சித் தாபனம் நிர்ணயிக்கும் தொகைக்கும் ரொக்கமாக அல்லது உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை அங்கீகரிக்கும் உத்தரவாதச் சங்கம் ஒன்றின் மூலமாக நம்பிக்கை உத்தரவாத முறிகொண்டு பிணை செலுத்துமாறு வேண்டப்படலாம்.

(ஊ) உள்ளூராட்சிச் சேவையில், அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்காதவர்களாயிருந்து நியமிக்கப்படுபவர்கள் இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவை செய்வதற்கு வேண்டிய தேக தகுதியுடைமை பற்றி முறையான தகைமை பெற்ற வைத்தியர் ஒருவரின் வைத்திய பரிசோதனையிற் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர்.

(எ) வேறுவிதம் குறிக்கப்பட்டாலன்றி நியமனம் பொதுவாக மூன்றாண்டு காலத்துக்கு தகுதிகாண் நிலையில் இருக்கும். அல்லது மூன்றாண்டு காலத்துக்குப் பின்னர் உறுதிப்படுத்துவதற்கு அமைவானதாக இருக்கும்.

(ஏ) விண்ணப்பதாரர்கள், வேண்டப்படும் நேரத்தில் தங்களுடைய பிறப்புச்சான்றிதழ்களையோ, அல்லது அதற்குப் பதிலாகத் தங்களுடைய உண்மையான வயதைக் குறிக்கும் சான்றிதழ்களையோ காட்டுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

(ஐ) நியமிக்கப்படுபவர்கள் தீவின் எப்பகுதியிலானும் சேவை செய்தல் வேண்டும்.

4. *உள்ளூராட்சிச் சேவைக்குப் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.*—(1) எப்பதவிக்கேனும் நீடியகாலம் விதிக்கப்பட்டாலன்றி சந்தர்ப்பத்திற்கேற்ப, இளைப்பாற்றுச் சம்பளமுள்ள பதவிகளின்/இளைப்பாற்றுச் சம்பளமில்லாத பதவிகளில் நியமிக்கப்படும் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்களின்" தகுதிகாண் நிலை/பரீட்சார்த்த காலம் மூன்று ஆண்டுகளாக இருக்கும்.

(2) புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை வினைப்படுத்துவதற்கு ஏதுவாக 1956 ம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச்சட்ட ஏற்பாடுகளுக்கும் இனிமேல் ஆக்கப்படும் சட்டங்கள், விதிகளுக்கும் அமைந்தொழுகுவார்களென்ற நிபந்தனைகளுக்குட்படல் வேண்டும்.

(3) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தங்களுடைய தகுதிகாண்/பரீட்சைகாண் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில் கடமை செய்யும் அறிவு பெறல் வேண்டும்.

(4) தகுதிகாண்/பரீட்சைகாண் காலமுடிவில் அவர்களின் நியமனம் உறுதிப்படுத்துகின்றமை பிறவற்றோடு, குறிப்பிட்ட காலவரையறைக்குள், க. பொ. த. ப. தரத்திற்கு மேற்படாத நிலைவரையுள்ள, விதிக்கப்பட்ட சிங்களத்தேர்ச்சி சோதனைகளில் சித்தியடைவதைப் பொறுத்திருக்கும். குறிக்கப்பட்ட காலத்துள் இத் தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனைகளில் தேறும்வரை அவர்களுக்குரிய வேதனப் பெருக்கங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை அடையாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/பரீட்சைகாண் காலமுடிவில் நிறுத்தப்படலாம்.

(5) *கல்வியும் ஏனைய தகைமைகளும்.*—சி. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்கு சமமான அல்லது உயர்ந்த பரீட்சை ஆகக்

குறைந்த தகைமை என்று விதிக்கப்பட்ட எல்லாச் சேர்வுத் திட்டங்களிலும், சிங்கள மொழியில் கல்விபயின்ற, சிங்களப் பரீட்சார்த்தி சிங்கள பாஷையில் அல்லது அதற்குச் சமமானதில் சிரேஷ்ட பாடசாலைத் தாராதரப் பத்திரம் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(1963 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ம் திகதிக்கு முன்னர் தொடக்கம் உள்ளூராட்சிச் சேவையிலிருந்துவரும் உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள வேறு பதவிகளுக்கு நியமனம் பெறவிரும்புபவர்களுக்கும் இந்தத் தகைமை பொருந்தாது).

குறிப்பு. (1)—சிங்களமொழி மூலம் உள்ளூராட்சி சேவையில் புகும் தகைமைபெறும் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்துவதற்கு ஒரு முன்தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

குறிப்பு (2).—இதில் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்" என்பது அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்தின்படி 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிரசுரமாகும் விளம்பரங்களின் மூலம் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களுக்கும் பொருந்தும்.

குறிப்பு (3).—4. (3) ஆம், (4) ஆம் பந்திகளில் உள்ள ஏற்பாடுகள் அரசாங்க அலுவலகங்களில் கடமையாற்றும் முன்சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள நியமனங்களை ஏற்பதற்காகப் பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கும் பொருந்தாது.

5. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்க வேண்டும். "இலங்கையர்" என்பது வம்சாவழியாகவோ பதிவு செய்ததாலோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

6. **போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்களுக்கான சலுகை.**—(அ) விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளுக்கு விதந்துரைக்கப்பட்ட மிகக் கூடிய வயது எல்லைக்குள் தம்மைக் கொண்டுவர உதவும் விதத்தில் தமது வயதுகளிலிருந்து கிரமமான படையிற் தாம் ஆற்றிய சேவையைக் கழிப்பதற்கு, போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

(ஆ) எந்தப் பதவிகளுக்குமுரிய புதிய நியமனத் திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட மிகக் குறைந்த கல்வித்தகைமையிலிருந்து, அடுத்துக் குறைவான பரீட்சையைத் தமது மிகக் குறைந்த கல்வித் தகைமையாகக் கருதுவதற்குப் போர்ப்படை வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

7. **வயதுச்சலுகை.**—இரு வருட தொடர்சியான சேவையுள்ள நிரந்தரப் பதவி வகிக்கும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள், உள்ளூராட்சி சேவையிலுள்ள பதவிகள் விளம்பரப்படுத்தப்படும் பொழுது வயது எவ்வாறிருப்பினும் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவராவர்.

8. **(வேண்டற்பால ஏனையவை.**—(1) உள்ளூராட்சித் தாபனமொன்றில் கடமையாற்றுபவர்கள் விண்ணப்பங்கள், அவர்கள் கடமையாற்றும் உள்ளூராட்சித் தாபனத்தின் மாநகரசபை ஆணையாளர் அல்லது தலைவர் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வப்பகுதிகளின் தலைவர்கள் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுடைய விண்ணப்பங்களின் விடயத்தில், விண்ணப்பகாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுதற்குத் தாம் தயாரா? இல்லையா? என்பதைத் சம்பந்தப்பட்ட பகுதியின் தலைவர் விண்ணப்பத்தை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

(3) குறிக்கப்படும் ஒரு நேரத்திலும் இடத்திலும், நேர்முகப் பரீட்சைக்கோ, பரீட்சைக்கோ தோற்றுமாறு அபேட்சகர்கள் வேண்டப்படலாம். இதன் பொருட்டு பிரயாணச் செலவுகளோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

(4) அபேட்சகர் ஒருவரைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் ஒரு குணச்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அதனைச் செய்யலாம். அபேட்சகர் ஒருவருக்குச் சாதகமான நேர்முகமாகவேனும் மறைமுகமாகவேனும் எவ்விதமான ஆதரவும் தேடுதலேனும் அபேட்சகர்கள் தேர்ந்தெடுப்பதற்கு எந்தவிதமான முயற்சியும் செய்தலேனும் அவ்வபேட்சகர்களுக்குத் தகைமையின்மையை உண்டாக்கும்.

(5) விண்ணப்பத்தில் உள்ள கூற்றெதுவும் செம்மையற்றதென்று தெரிவிற்கு முன்னர் காணப்படின் விண்ணப்பதாரருக்கு தகைமையீனத்தை உண்டாக்கும்; தெரிவிற்குப் பின்னர் காணப்படின் அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்குப் பாத்திராவர்.

(6) இவ்விளம்பரத்தில் வேண்டப்படுவனவற்றிற்கு சகல வகைகளிலும் இணக்கமாயில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(7) "கீழே இணைக்கப்பட்ட படிவத்தில்" விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளருக்கு முகவரி இடப்பட வேண்டும். நேரடியாக அவருடைய பெயருக்கு அவை அனுப்பப்படக்கூடாது.

(8) முடிவுத் திகதிக்குப் பின்னர் இக்கந்தோரில் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் சாதாரணமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. விண்ணப்பம் தபாலிற், காணாமற்போய்விட்டதோ அல்லது தாமதமாகி விட்டதோ என்ற குற்றச்சாட்டுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கடைசி நாட்கள் வரை தமது விண்ணப்பங்களை அனுப்பாமல் வைத்திருக்கும் பரீட்சார்த்திகள் தாமாகவே விளைவைத் தேடிக்கொள்கின்றனர்.

**வேறுவிதம் கூறப்பட்டாலன்றி உபயோகிக்கப்பட வேண்டிய விண்ணப்ப மாதிரிப் பத்திரம்**

உள்ளூராட்சிச் சேவை

**முக்கியமாகக் கவனிக்க.**—விண்ணப்பத்தைக் கீழே விதித்துள்ள முறையில் எழுதி பதவி பற்றிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலிற் சொல்லப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர், உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை, தபாற் பெட்டி 530, கொழும்பு என்ற விலாசத்தை அடையும் வண்ணம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை செயலாளரின் பெயருக்கு விலாசமிட்டு அனுப்பலாகாது.

(2) விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களை, தயார் செய்யு முன்னர் மேற்கூறிய பொது நிபந்தனைகளையும் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் வேண்டுதலையும் கவனமாக வாசித்து விண்ணப்பிப்பதற்குத் தாங்கள் சகல வகைகளிலும் அருகதையுடையவர்கள்தான் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகின்றது. விண்ணப்பகாரர் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலை உசாவி, உரிய சகல தகவல்களையும் தவறாது கொடுக்கவேண்டும்.

(3) விண்ணப்பகாரர் கீழ்க்காணும் சாதனங்களின் பிரதிகளை அவர்களின் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.—(1) ஆங்கிலத்தில்/சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய ஆக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ், (2) குணச் சான்றிதழ். (3) பதவி அத்தகைய தன்மைதாயின் உயர் தொழில்/தொழில்நுட்பத் தகைமைகளின் சான்றிதழ்.

(4) விண்ணப்பகாரர் மேற்கூறிய பொது நிபந்தனைகளின் 8 ஆம் பந்தியை விசேடமாகக் கவனிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

**.............................(...............) பதவிக்கான விண்ணப்பம்**

1. (அ) வெற்றுப் பதவி விளம்பரப்படுத்தப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையின் திகதி :————.
   (ஆ) ..................................பதவிக்கான விண்ணப்பம்

2. முழுப் பெயர் (தனித்தனி எழுத்துக்களில்) :————.
   தேசிய இனம் :————.
   (மேலேயுள்ள 5 ஆம் நிபந்தனையில் கூறப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின்படி இலங்கையரா? இலங்கையரல்லாதவரா? என்பதைக் கூறுக. நீர் பதிவு மூலம் இலங்கைப் பிரசையாயிருப்பின் பிரசாவுரிமைச் சான்றிதழின் சார்பு எண்ணையும் திகதியையும் கூறுக.)

3. தபால் விலாசம் :————.
   (விலாசமாற்றமெதுவும் உடனே அறிவிக்கப்பட வேண்டும்.)

4. (அ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியில் சரியான வயது :—.
   ————வருடங்கள்————மாதங்கள் ————நாட்கள்.
   (ஆ) பிறந்த திகதி :————. வருடம் :————. மாதம் :————. திகதி) :————.

5. பிறந்த இடம் :—
   (அ) விண்ணப்பகாரர் :————.
   (ஆ) அவரது பிதா :————.
   (இ) அவரது பிதாவழிப் பேரன் :————.
   (ஈ) அவரது பிதாவழிப் பாட்டன் :————.
   (விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் ஒன்றில் (ஆ) வை அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பகாரர் இலங்கையில் பிறவாதவராயின் (அ) வோடு ஒன்றில் (ஆ) வையும் (இ) வையும் அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும்).

6. விவாகமானவரா ? தனியாளரா ? அல்லது தாரமிழந்தவரா ? கைம்பெண்ணா ? :————.

7. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகளும், கல்லூரிகளும் மற்றும் தாபனங்களும் : ————.

| பொதுக் கல்வி | | | உயர் தொழில்/தொழில் நுட்பக் கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | சேர்ந்த திகதி | விட்ட திகதி | தாபனம் | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
| 1 ........ | ........ | ........ | 1 ........ | ........ | ........ |
| 2 ........ | ........ | ........ | 2 ........ | ........ | ........ |
| 3 ........ | ........ | ........ | 3 ........ | ........ | ........ |
